**STC.52/2021 PW-1**

நாள்: 21.12.2022

பெயர்: நாகேந்திரபிரசாத்

த/பெ: **ரவீந்திரன்**

**அ.சா. 1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

1. வாசவி மார்கெட்டிங் என்பது ஒரு proprítor நிறுவனம்ஆகும். அதன் propritor என்னுடைய மனைவி ரேவதி ஆவார். இந்த புகாரை நான் என் ரேவதி பெயரில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். நிறுவனத்தின் வரவு செலவு கணக்குகளை ரேவதி தான் பார்த்து வருகிறாரா என்றால் ஆமாம். 1வது எதிரி பிரைவேட் லிமிடெட் கம்பெனி என்றால் ஆமாம். 4ஆம் எதிரியை நான் இதுவரை பார்த்ததில்லை. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காசோலையில் 4ஆம் எதிரியின் கையெழுத்து இல்லை என்று சொன்னால் ஆமாம்.

2. 6வது எதிரி அப்துல் வகாபிற்கும் 1ஆம் எதிரி நிறுவனத்தின் இயக்குனர் இல்லை என்று சொன்னால் ஆமாம். ஆகவே 1ஆம் எதிரிக்கும் 6 ஆம் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் ஆமாம். 4 ஆம் எதிரி சாக்குவை மும்தாஜ்பேகம் என்பவருக்கு சுமார் 80 வயது மதிக்கத்தக்க முதியவர் என்று சொன்னால் ஆமாம். வழக்கு காசோலையில் 6 ஆம் எதிரி அப்துல் வகாப் தான் கையெழுத்து செய்துள்ளார். 6ஆம் எதிரி குளோபல் எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனத்திற்காக கையெழுத்துசெய்து வழக்கு காசோலையை என்னிடம் கொடுத்தார். குளோபல் எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனத்தை இந்த வழக்கில் எதிரியாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை.

3. 6வது எதிரியிடமிருந்து நேரடியாக எனக்கு எந்த பாக்கியும் வரவேண்டியது கிடையாது. அவர் அவருடைய கடனுக்காக வழக்கு காசோலையை என்னிடம் கொடுத்து அனுப்பினார்.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

**Sd/-D.Naveen Durai Babu**
District Munsif cum Judicial Magistrate,
Ranipet.